நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 230 ஆங்கீரச ஆடி 08 (23.07.1992) வியாழன்

● வட - கிழக்கில்

## கொப்பேகடுவவை மையப்படுத்தி தொடர் இராணுவ நடவடிக்கை

இராணுவ மற்றும் அரசியல் தலைமைத்துவங்கள் வடக்கு - கிழக்கில் விடுதலைப்புலிகளின் மேலாதிக்கத்தையும் தாக்குதல் பலத்தையும் இவ்வருட இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனக் கருதுவதாக ஐலண்ட் கட்டுரையாளர் ஷமிந்திர பெர்டினாண்டோ கூறியுள்ளார். இந்த நோக்கத்தின் அடிப்படையில் ஆயுதப்படைகளின் தொடர் நடவடிக்கைகள் பல வடக்கு கிழக்கில் இடம்பெறலாம். வடக்குக் பொதுக் கட்டளை அதிகாரியாக பணிபுரியும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அடுத்தவருடம் முதலாம் திகதி இராணுவ ஆளணித் தலைவராகப் பொறுப்பேற்பதற்கு முன்பாக இடம் பெறலாம்.— 04 ஆம் பக்கம் பார்க்க

## உயர்தர விசேட பரீட்சை "91" முடிவுகள் இம்மாத இறுதி

யாழ் மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற 1991 ஆம் ஆண்டிற்கான விசேட க. பொ. த உயர்தர பரீட்சையின் முடிவுகள் இன்னும் இரு தினங்களில் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் கொழும்பில் அறிவித்துள்ளார் என்று யாழ் கல்வித்திணைக்கள பரீட்சை பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாத முடிவுக்குள் யாழ் கல்விப்பணிப்பாளரினால் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்படலாம் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

22 47 07

## ஆங்கில ஆசிரியர் பரீட்சை அடுத்த மாதம்

யாழ் மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர் தெரிவு போட்டி பரீட்சை ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

07,47

## க. பொ. த சாதாரண தர பரீட்சை முடிவுகள் வந்துள்ளன

யாழ் மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டிற்கான க. பொ. த சாதாரண மீளப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் முடிவுகள் நேற்று யாழ் கல்வித்திணைக்களம் வந்தடைந்ததாகவும் பரீட்சார்த்திகளுக்கு உடனடியாக தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது.

இப்பரீட்சைக்கு தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக யாழ் கல்வித்திணைக்களத்துக்கு வந்து தமது பெறுபேறுகளை பெற்று செல்லுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

47, 22

## கிராமசேவகர் பரீட்சை ஆகஸ்ட் 26 ஆம் திகதி

கிராம அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் விசேடபரீட்சையாக நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

இப் போட்டிப் பரீட்சை சென்ற யூன் மாதம் 13 ஆம் திகதி நாடு பூராகவும் நடத்தப்பட்டது.

ஆனால் இப் போட்டிப் பரீட்சையின் வினாத்தாள்கள் யாழ்ப்பாணம் வந்து சேராததினால் பரீட்சை நடத்துவது தடைப்பட்டிருந்தது தெரிந்ததே.

47, 07

✕ முடிவு திகதி ஆகஸ்ட் ஏழு

# முஸ்லிம் மக்கள் கொலையில் வேறுநாடு பின்னணியில்!

## அஷ்ரப் சந்தேகம்

அண்மையில் மட்டக்களப்பு பகுதியில் இடம்பெற்று வரும் முஸ்லிம்களின் படுகொலைக்கு வேறு நாட்டினது அல்லது தீய சக்திகளினது கரங்கள் பின்னணியில் இருந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவை பாதிப்படையச் செய்ய சர்வதேச சக்திகள் முயற்சிக்கலாம் எனவும் அவர் அப்பேட்டியின் போது தெரிவித்தார். கொலைகளுக்கு புலிகள் தான் பொறுப்பு என முடிவு கட்டிவிட முடியாது வேறு சக்திஒன்று பின்னணியில் இருக்கலாம் எனக் குறிப்பிட்ட அஷ்ரப் இது நியாயமான சந்தேகமே என்றார்.

இராண்குளத்தில் 19 முஸ்லிம் பஸ் பயணிகள் பலியான சம்பவம் குறித்து சந்தேகம் எழுப்பிய அஷ்ரப் அதுகுறித்து விளக்கம் அளித்தார்.

சம்பவம் நடைபெற்றதினம் குறிப்பிட்ட அந்த பஸ் செல்லும் வீதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் அறிவிக்க முன் பஸ் கிளம்பி சென்றிருக்கிறது.

பாதுகாப்பற்ற சூழலில் இராணுவ நிலையைக்கடந்து வீதியில் தொடர்ந்து செல்ல பஸ்ஸை அப்போது கடமையிலிருந்த அதிகாரி எப்படி அனுமதிப்பார்?

அப்படியாயின் அப்போது கடமையிலிருந்த இராணுவத்தினருக்கும் பயணிகளைத் தாக்கிய அந்த ஆயுதக்கும்பலுக்கும் ஏதோ தொடர்பிருந்ததாக எம்மால் கருதமுடிகிறது என அஷ்ரப் சுட்டிக்காட்டினார்.

### ஏற்கனவே சுட்டிக்காட்டியது

இராண்குள பஸ் பயணிகள் கொலையில் வேறு ஒரு சக்தி பின்னணியில் இருந்திருக்கலாம் என அஷ்ரபைப் மேற்கோள் காட்டி முரசொலி கடந்த செவ்வாயன்று முஸ்லிம் கொலை வேறு கரம் சம்பந்தமா? என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்தமை வாசகருக்கு நினைவிருக்கலாம்

## அரசின் விசாரணைக்குழு சுதந்திர செயற்பாடற்றது

இராண்குள பஸ் கொலை சம்பவம் குறித்து அரசு அமைத்துள்ள மூவர்கொண்ட விசாரணைக்குழுவில் தமக்கு திருப்தியில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பி பி ஸிக்கு வழங்கிய பேட்டியின் போது குறிப்பிட்டார்.

இந்த விசாரணைக் குழுவில் முஸ்லிம் காங்கிரசும் பங்கு பற்றவேண்டும் விசாரணையின்போது சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய மற்றும் சாட்சிகளை தெரிவுபடுத்த தமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் எனவும் அஷ்ரப் அப்போது கோரிக்கை வெளியிட்டார்.

அரசின் விசாரணைக்குழுவினால் சுதந்திரமாக விசாரணைசெய்யமுடியும் என்றோ சுதந்திரமான முடிவை வெளியிடமுடியும் என்றோ தாம் எதிர்பார்க்க முடியாது எனவும் அஷ்ரப் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் கும்பல்கள் பரவலாக மட்டக்களப்பில் தாக்குதல்

நேற்று முன்தினம் சித்தாண்டியில் சுமார் 10 முஸ்லிம்கள் ரயிலில் இருந்து இறக்கப்பட்டு சுட்டுக் கொலைப்பட்ட சம்பவத்தையடுத்து முஸ்லிம் கும்பல்கள் தமிழர் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

இதன் ஒருகட்டமாகவாழைச்சேனைப்பகுதியில் பல வாகனங்களுக்கு முஸ்லிம்கள் தீ வைத்தனர். இதனால் தமிழ் வாகனச்சாரதி ஒருவர் பலியானார். கல்வீச்சுத் தாக்குத = 4 ஆம் பக்கம் பார்க்க

● இராணுவ அதிகாரிகள் மௌனம்

# தேரரின் அலுவலகத்தினுள்

× முடிவு திகதி ஆகஸ்ட் ஏழு

## எழுது வினைஞர் சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் பதவி விண்ணப்பம்

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளில் உள்ளடக்கப்பட்ட பதிவேழு சேவைகளுக்கும், அரசாங்க சேவைக்கும் மாகாண அரசாங்க சேவைக்கும் சுருக்கெழுத்தாளர்களையும், தட்டெழுத்தாளர்களையும்.

ஆட்சேர்ப்பதற்கான 1992 பொதுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன! 1992 ஜூலை 17 ஆம் திகதிய வர்த்தமானியில் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி 1992 ஆகஸ்ட் மாதம் ஏழாம் திகதியாகும்.

பரீட்சைகள் செப்டெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன. யாழ். மாவட்டத்தில் பரீட்சை நிலையங்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மனாவி, தெல்லிப்பழை, பருத்தித்துறை, ஆகிய பகுதிகளில் அமையுமென அறி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தேரரின் அலுவலகத்தினுள் வெடிகுண்டு எப்படி வந்தது?

தந்திரிமலை ரஜமஹா விஹாரை தேரர் தமது அலுவலக அறையில் இரவு பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த போதே குண்டு வெடித்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தேரரின் அலுவலகத்தில் கைக்குண்டு எதுவும் வீசப்படவில்லை தவறுதலாக வெடிகுண்டு வெடித்து அவர் பலியாகினார் என கூட்டுப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் பௌத்த தேரரின் அலுவலகத்தினுள் எப்படி வெடிகுண்டு வந்தது என்பது குறித்து அவ்வதிகாரி எதுவும் தெரிவிக்கவில்லை என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் தேரரின் அலுவலகம் மட்டுமே சேதமானது எனவும் விஹாரையின் வேறு எந்தப் பகுதியும் சேதமடையவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோது விஹாரையில் பாதுகாப்புப் படையினர் காவலுக்கமையில் இருந்ததாக பி. பி. ஸி தெரிவித்தது.

## தந்திரிமலை விகாரை குண்டு வெடிப்பு

# பிரதம தேரர் உடல் சிதறிப் பலி!

தந்திரிமலையிலுள்ள பிரதம பௌத்த விகாரையில் நேற்று முன்தினம் இரவு பெரும் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக் குண்டு வெடிப்பில் அந்த விகாரையின் பிரதம குருவான கொலபாங்கட விமல ஞான தேரோ உடல் சிதறிப் பலியானார்.

தந்திரிமலை அனுராதபுரம் மாவட்டத்தில் மன்னார் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

இக்குண்டு வெடிப்புக்கான காரணமெதுவும் உடனடியாக அறியப்படவில்லை

நேற்று முன்தினம் இரவு 7.40 மணியளவில் பிரதம பிக்குவின் அறையில் இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றது.

இச் சம்பவம் பற்றி உடனடி விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது. விசேட பொலிஸ் குழு ஒன்றும் கொழும்பிலிருந்து தந்திரிமலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

● ஜனாதிபதி உத்தரவு

## அரசமரியாதையுடன் மரணச்சடங்கு

குண்டு வெடிப்பு சம்பவத்தில் பலியான தந்திரிமலை ராஜமகா விகாரையின் பிரதமகுரு கொலபாங்கட விமல ஞான தேரரின் மரணச்சடங்குகள் முழு அரச மரியாதையுடன் நடைபெறவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று பணித்துள்ளார்.

மரணச்சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விகாரை வளவினுள்ளேயே நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தினமும் இராணுவ சோதனை

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் அகதிகள் தங்கியுள்ள 13 முகாம்களிலும் இலங்கை இராணுவத்தினர் தினமும் தேடுதல் வேட்டை நடத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் இம் முகாம்களிலிருந்து 13 தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனி இறக்குமதிக்கு வருடாந்தம் 500 கோடி ரூபா!

சீனி இறக்குமதிக்காக அரசு வருடாந்தம் 500 கோடி ரூபாவை செலவு செய்து வருகிறது.

விவசாய அமைச்சர் ரூப கருணாதிலக இத்தகவலைத் தெரிவித்தார்.

தற்பொழுது சேவனகல, கந்தளாய், ஹிங்குராண ஆகிய இடங்களில் அரசுக்குச் சொந்தமான மூன்று சீனித்தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பெலவத்தையில் தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தற்காலிகமாகத் தங்குவோருக்கு சுங்கச்சோதனை விலக்கு

பிறநாடுகளுக்குச் செல்லும் மார்க்கத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறிது நேரம் தற்காலிகமாகத் தரித்து நிற்கும் 'ட்ரான்சிற்' பயணிகளின் பயணப் பொதிகள் வழமையான சுங்கப் பரிசோதனைக்கு இனி உட்படுத்தப்படமாட்டாது.

இது காலவரை இத்தகைய பயணிகளின் பொதிகளும், இலங்கைக்கு வரும் ஏனைய பயணிகளின் பொதிகளைப் போலவே சுங்க அதிகாரிகளுக்கு உட்படுத்தப்பட்டு சோதனையிடப்பட்டன. ஆனால் இவை இனி சுங்க அதிகாரிகளிலிருந்து விலக்குப்பெறும். ட்ரான்சிற் பயணிகள் தங்கள் உடைய பெறுமதியுடைய பொருள்களைத் தம்முடன் எடுத்து வர இனி எத்தகைய தடையும் இருக்காது.

## மாணவர் அவை செயற்பட அனுமதிக்குமாறு கோரிக்கை

"மாணவர் அமைப்புக்களின் செயற்பாடுகள் மாணவர்களிடமே விடப்பட வேண்டும். அதிபராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட குழுக்களாலோ நடத்தப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும்"

இவ்வாறு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களுக்கான வரவேற்பு உபசாரம் மாணவர்களால் நடத்தப்பட வேண்டும். அது அதிபரின் நெருக்குதலால் வைக்கப்பட முடியாது.

மாணவர் அவைக்கு ஒரு ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்துவதற்கும் மாணவர் அவை தொடர்ந்து செயற்படுவதற்கும் நிர்வாகம் அனுமதிக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 708 மாணவர்கள் மன்னாரில் தோற்றுவர்

மன்னார் மாவட்டத்தில் ஆண்டு 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை 10 நிலையங்களில் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கு மன்னார் மாவட்டத்திலிருந்து 708 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

## பாசிப்பயறுச் செய்கையாளர்களுக்கு இலவசமாக எரிபொருள்

வெபர் கிராமம் பண்டாரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் 100 பேருக்கு பாசிப்பயறுச் செய்கைக்கு விதை பயறும், தலா 14 லீற்றர் மண்ணெண்ணெயும் இலவசமாக வழங்கியுள்ளது.

இலவசமாக எரிபொருளும் விதை பயறும் பெற்ற பயறுச் செய்கையாளர்கள் வெபர் கிராமத்திற்கு குறிப்பிட்ட அளவு பயறு மீண்டும் மறுபோகத்துக்கு விதை பயறாக விலைக்கு வழங்க வேண்டும்.

டன் இணை நில்லுங்கள். நாம் எதிரியை எந்நிலையில் சந்திப்போமானால் வெற்றி பெறுவோம். இழப்பு குறையும், எந்நிலையில் சந்தித்தால் இழப்பு கூடும். எதிரியை எந்நிலையில் சந்திப்பது? எந்நிலையில் சந்திப்பதா என்பதை நீங்களே முடிவு செய்ய வேண்டும்" என்று மாவீரர்களை நினைவு கூர்ந்து ஒருநகர் செல்றோக்கி மேடைப் பேச்சு அரங்கில் விடுதலைப்புலிகள் கடற்புலிகளின் பரிதி கூறினார்,

அவர் மேலும் உரையாற்றும் போது "நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்றுள்ளவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். நீண்ட காலமாக சிறிலங்கா அரசு புதிய புதிய இடங்களுடனும் நவீன ஆயுதங்களுடனும் எம்முடன் யுத்தம் புரிகிறது. இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நாம் அவனுடன் போராடுகிறோம்" என்றார், 12

## தீவக கிராமசேவகர்களின் படியை நிறுத்தப் பணிப்பு

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவை உத்தியோகத்தர்களின் பிரயாண படி அலுவலக அலவன்ஸ், பதில் கடமை அலவன்ஸ் முதலானவற்றை நிறுத்தும்படி அமைச்சு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமசேவை உத்தியோகத்தர்களை செயலக உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கையொப்பமிடுமாறு மேலிடம் பணித்துள்ளதாகவும் அறியக்கிடக்கின்றது. 18

## வேதாரணியத்தில் இருமர்மப்படகுகள் கடற்படை சுட்டும் தப்பினர்

நேற்று முன்தினம் அதிகாலை வேதாரணியம் கடற்பகுதியில் இரண்டு மர்மப் படகுகளின் நடமாட்டம் காணப்பட்டதாக தமிழகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இந்தப் படகுகள் இரண்டையும் பிடிப்பதற்கு இந்திய கடற்படைப் படகுகள் முயன்றதாகவும் இருதரப்பாருக்கும் இடையே நிகழ்ந்த பலத்த துப்பாக்கிச் சமரின் பின்னர் அந்த இரு படகுகளும் கடற்படையின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிறிய செய்திகள்

## அம்பாள் ஆலய மஹோற்சவம்

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை வீரமாபிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவ தினமாகும். (37)

## யாகப்பர் உற்சவம்

இளவாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 16 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்ற இம் மாதம் 25 ஆம் திகதியன்று திருப்பலி பூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

நவநாள் ஆராதனைகளை இளவாலை பங்குத் தந்தை அருட் திரு ரெஜி இராஜேஸ்வரன் அடிகளார் மேற்கொண்டு வருகின்றார். (13)

## இந்து இளைஞர் மன்றம்

வடலிவடைட்டு பகுதி மக்களின் நலன் கருதி இந்த இளைஞர் மன்றம் ஒன்று அண்மையில் அங்குராரர்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. 18

## சிறுமியின் சாதனை

12 வயதான விஜயஸ்ரீ என்ற சிறுமி சென்னையில் கடந்த வாரம் அம்பாஸிடர் காரொன்றைத் தனது கூந்தலினால் இழுத்துச் சென்று சாதனை புரிந்தார்.

## ஆங்கில தினப் போட்டிகள்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மட்டத்தில் கடந்த 14 ,16 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டிகளில் சென்லியபறை மகாஜனக்கல்லூரி அதிக புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றது 13

## பல்கலை அணி சாம்பியனானது

பல வருடங்களின் இடைவெளியின் பின் யாழ்ப்பாணத்தில் றேட்டறிக் கழகத்தினரால் நடத்தப்பட்ட, ஹொக்கிப் போட்டியில் யாழ் பல்கலைக் கழக அணி சம்பியனானது.

அண்மையில் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணி கொக்குவில் பழைய மாணவர் ஹொக்கி விளையாட்டுக்கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. (16)

## 25 ஆவது இலவச வெளியீடு

அபிராமி அந்தாதி 34ஆவது செய்யுளின் ஆய்வுரையை சுழிபுரம், வழக்கம்பரை பஜனைச் சபையினர் இலவச வெளியீடாக வெளியிட்டுள்ளனர். அபிராமி அந்தாதி ஆய்வுரை இலவச வெளியீட்டில் இது 25 ஆவது வெளியீடு என்று அறிய முடிகின்றது 8 பக்கங்கள் கொண்ட இந்த ஆய்வுரையை தமிழகத்தைச் சேர்ந்தவரான புலவர் வே சந்தரராமன் எழுதியுள்ளார் 50

## லட்சார்ச்சனை

கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ஆலய லட்சார்ச்சனை இன்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. 22

## கல்லூரிப் பெருவிழா

சாவகச்சேரி திரு இருதயக் கல்லூரியின் - கல்லூரி வருடாந்த விழா சென்ற புதன் கிழமை நடைபெற்றது விழா ஆரம்பத்தில் வண. நேசநாயகம் அடிகளார் ஆலய முன்றலிலிருந்து அழைத்துவரப்பட்டு பாடசாலையின் பெஞ்சமின் மண்டபத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## சீ. சீ. கழக போட்டிகள்

கொக்குவில் சீ சீ கழகம் நடத்தும் 30 பந்து மாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டித் தொடரில், இடம் பெற்ற இரண்டாவது அரை இறுதிப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி பற்றிசன்ஸ் அணியை வெறு இல வாகத் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 30 பந்துமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைக் குவித்தது.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பற்றிசன் அணி ஒன்றன் பின் ஒன்றாக சகல இலக்குகளையும் துரிதகெதியில் பறிகொடுத்து 89 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. (16)

## தென்மராட்சி தடகள போட்டி முடிவுகள்

தென்மராட்சிப் பிரிவு கழகங்களுக்கிடையேயான தடகளப் போட்டி அண்மையில் மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது

தென்மராட்சிப் பிரிவைச் சேர்ந்த 24 கழகங்கள் பங்கு பற்றிய இப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

போட்டி இறுதியில் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுவில் மோகனதாஸ் அணி முதலாமிடத்தைப் பெற்றது.

இரண்டாமிடத்தை மிருசுவில் புனித நீக்கலாஸ் கழகம், மறவன்புலோ உதயம் கழகம், மட்டுவில் கலைவாணி கழகம் என்பன பெற்றன.

## கொத்தணி கலை விழா

சுழிபுரம் கொத்தணிப் பாடசாலைகளின் கலை விழா இம் மாதம் 30 ஆம் திகதி பன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (13)



# 2470 கோடி டொலர் ஆயுதங்களை அமெரிக்கா விற்றது!

அமெரிக்காவிடமிருந்து வளர்முக நாடுகள் மேற்கொள்ளும் ஆயுதக் கொள்வனவு கடந்த ஆண்டு 40 சத வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது

அமெரிக்காவே வளர்முக நாடுகளுக்கு ஆயுதங்கள் வழங்கும் முக்கிய நாடாகத் தொடர்ந்தும் விளங்கி வருகிறது

கடந்த ஆண்டு 2470 கோடி டொலர்கள் பெறுமதியான ஆயுதங்கள் வளர்முக நாடுகளினால் அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன.

முன்னர் வளர்முக நாடுகளுக்கு ஆயுதங்கள் வழங்கும் பிரதம நாடாக சோவியத் யூனியன் விளங்கி வந்தது.

ஆயினும் 1990 ஆம் ஆண்டு அமெரிக்கா இந்த இடத்தைப் பிடித்துக்கொண்டது

சவூதி அரேபியாவே ஆகக் கூடுதலாக 780 கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களை அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.

இதற்கு அடுத்தபடியாக தென்கொரியா 310 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை வாங்கியுள்ளது.

இலங்கையும் அமெரிக்காவிடமிருந்து கணிசமான அளவு ஆயுதங்களைப் பெற்றுள்ளது.

## அதிபர்களுக்கு

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலைகளின் அதிபர்கள் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை யாழ். கல்வித் திணைக்களத்தில் இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்

விண்ணப்ப படிவங்களை அதிபர்கள் தமது கோட்டக் கல்வி அலுவலகங்களினூடாக பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. 47

## செயலகத்தில் பயிலுநர்க்கு அனுமதி

யாழ் செயலகத்தில் பணிபுரிந்து வந்த யாழ் தொழில் நுட்பக் கல்லூரி பயிலுனர்களை மேலும் ஒரு வருடத்திற்கு தொடர்ந்து பணிபுரிவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த பயிலுநர்கள் கடந்த ஒரு வருட காலமாக யாழ் செயலகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் கடமையாற்றி வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (47,07)

## தீவக அணி முன்னணியில்

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டியில தீவக பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகள் முன்னணி இடத்தைப் பெற்றன

இப்போட்டியில் தீவக பாடசாலைகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவ நிகழ்ச்சி நேற்று முன் தினம் யாழ்சென்ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெற்றது. 12

## குரங்கு கடி சிறுமிகள் காயம்

குரங்குகளினால் கடித்துக் காயப்படுத்தப்பட்ட இரு சிறுமிகள் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்கள் 13

## இயந்திரம் திருட்டு

விவசாயக்காணியில் நீர் இறைத்து விட்டு வீடு திரும்பி சென்றவர் சாப்பிட்டு விட்டு மீண்டும் நீர் இறைக்கச்சென்ற போது நீர் இறைக்கும் இயந்திரத்தைக் காணவில்லை வடலியடைப்பு விவசாயியின் நீர் இறைக்கும் றொபின் 20 மார்க்க புதிய இயந்திரமே களவாடப்பட்டதாகும் 26

# துரைமாரைப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்த தொழிலாளர்கள்

இரவு நேரத்தில் தோட்டலயன்களுக்குச் சென்று தொழிலாளர்களைப் பயமுறுத்தும் நோக்கத்துடன் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததாகக் கூறப்படும் தோட்டத்துரை ஒருவரும், மூன்று உதவித்துரைமார்களும் தொழிலாளர்களினால் வளைத்துப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச் சம்பவம் தெகியோவிட்ட ரூவான்கல் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது

இத் தோட்டத்துரை மாற்றுக் கட்சி ஒன்றிற்கு ஆதரவாளர்களைச் சேர்த்ததாகவும் இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும், மாற்றுக் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டதாகவும் இதனை அறிந்த துரை தன் சகாக்களுடன் வந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

அவிசாவளை மஜிஸ்ரேட் நான்கு துரைமார்களையும், துரை ஒருவருக்குக் காயமேற்படுத்தியதாகக் கைதான 6 தொழிலாளர்களையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# பொதிகையில் ஆர்.வி.குடியேற தமிழக அரசு ஏற்பாடு

இம் மாதம் 25 ஆம் திகதியுடன் பதவிக்காலம் முடிவடையும் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுக்கு சென்னை அடையாறு கறீன்வேஸ் றோட்டிலுள்ள பொதிகை என்ற அரசாங்க வீட்டை வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது

தற்போது அங்கு உள்ள கல்வியமைச்சர் சி. அரங்கநாயகம் அதனைக் காலி செய்துவிட்டு அடையாறில் தற்சமயம் இயங்கும் இயல், இசை நாடக மன்றக் கட்டடத்துக்குக் குடிபோகிறார்.

# தபால் சேவையை தனியாரிடம் ஒப்படைக்க அரசு ஆலோசனை

தபால் சேவையையும் தனியாரிடம் ஒப்படைக்க அரசு ஆலோசித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன

அண்மையில் பிரதமர் டி. பி. விஜயதுங்க வைபவமொன்றில் ஆற்றிய உரையில் இதனை சூசகமாகத் தெரிவித்தார்.

'தபால் சேவையில் அரசு - தனியார்துறை போட்டி எதிர்காலத்தில் ஏற்பட இடமுண்டு பிறநாடுகள் சிலவற்றில் தபால்துறை தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் சிறப்பான சேவையை அந்நாட்டு மக்கள் பெற்று வருகிறார்கள், இவ்வாறான நிலை இங்கும் எதிர்காலத்தில் ஏற்பட இடமுண்டு என பிரதமர் அங்கு கூறினார்

# சதாம் ஹுசெயின் படுகோலை; அரபு நாடுகளில் வதந்தி

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெயின் அவரது மெய்க்காப்பாளர்களினால் படுகொலை செய்யப்பட்டார் என்னும் வதந்தி யொன்று அரபு நாடுகளில் பரவியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டு வாரங்களுக்கு முன்பாக சதாம் ஹுசெயினின் அரச சபைக்குள் இராணுவ அதிரடிப் புரட்சி மேற்கொள்ளப்பட்டதென அமெரிக்கப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

# கொழும்பில் ஜூன் மாதம் 96 வீதி விபத்து மரணங்கள்

கொழும்பு மநகரில் கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 96 பேர் வீதி விபத்துக்களினால் உயிரிழந்துள்ளனர்.

பாதசாரிகள் 39 பேரும், பிரயாணிகள் 21 பேரும், மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் 19 பேரும், சாரதிகள் 2 பேரும், காத்தைக்காரர் ஒருவரும் இவ்வாறு மரணமாகியுள்ளனர்

13 கார்கள், 22 மோட்டார் சைக்கிள்கள், 29 லொறிகள், 29 பஸ்கள், 24 சைக்கிள்கள், 4 டிரக்டர்கள், ஒரு கரத்தை ஆகியன இவ் விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளன.

## கலியர் தாக்குதல்

மண்டைதீவு, கல்முனை, பூநகரிப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் நேற்றுக் காலை யாழ்ப்பரை யோரப்பகுதிகளை நோக்கி ஷெலியர் தாக்குதல்கள் மேற்கொண்டனர் 07

# 450 பேரை தூக்கிலிட்டவர் 87 வயதில் மரணமானார்

ஒய்வு பெற்ற பின் தூக்குத் தண்டனையை எதிர்த்தவரும் பிரிட்டனின் பிரசித்தி பெற்ற தூக்காளருமான அல்பேர்ட் பியரி பொயின்ட் தனது 87 ஆவது வயதில் வட இங்கிலாந்து மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

தான் கடமையாற்றிய 25 ஆண்டுகளில் 433 ஆண்களையும் 17 பெண்களையும் இவர் தூக்கிலிட்டுள்ளார்

1956 இல் ஓய்வு பெற்றபின் இவர் தூக்குத் தண்டனையை எதிர்த்து வந்தார் 1969 இல் பிரிட்டனில் தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டது

இந்த நூற்றாண்டில் வேறு எவரையும் விட நானே அதிகமானோரைத் தூக்கிலிட்டிருக்கிறேன் என்றும் அவர் ஒருசமயம் கூறினார்

## ★ இந்தியாவிலிருந்து திரும்பும் தமிழ் அகதிகளுக்கு அமெரிக்கா நிதியுதவி

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென அமெரிக்கா நிதி உதவி வழங்கியுள்ளது. இரண்டு கோடி 15 இலட்சம் ரூபா நிதியுதவி கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலய மூடாக வழங்கப்படும்.

அகதிகளுக்கான அவசர தேவைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என யூ என் எச் சி ஆர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## உலகிடம் நெடுகவும் கடன்பட முடியாது

### - ஜனாதிபதி

'இலங்கை உலகிடம் நெடுகவும் கடன் பட்டுக் கொண்டிருக்க முடியாது'

இவ்வாறு குருநாகலில் நடைபெற்ற வைபவமென்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார் ஜனாதிபதி பிரேமதாசா.

கடனாளிகள் என்ற நிலையிலிருந்து எம்மை நாம் மீட்டெடுக்க வேண்டுமெனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

### எழுதுவினைஞர்...

விக்கப்பட்டுள்ளது.

முக்கிய விவரங்கள் நாளை முரசொலியில் வெளியிடப்படும்.

### கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானக் கண்காட்சி இன்று காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகும் எனவும் நுழைவாயில் பிற்பகல் 3 மணியுடன் மூடப்படும் எனவும் யாழ் பல்கலைக்கழக கண்காட்சி செயலகம் அறிவித்துள்ளது.

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்

**பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்**

இடம்:- குமாரசுவாமி மண்டபம்
காலம்:- 02. 08. 1992 ஞாயிறு
நேரம்:- காலை 10.00 மணி

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்

070g

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்- கிளை தலைமையகம்

**யாழ்.பிரிவு புதிய இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்கள்**

21-07-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு யாழ்பிரிவு கந்தோரில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் — திரு. கே. வைதீஸ்வரன்
உபதலைவர் — திரு எம் தம்பித்துரை
செயலாளர் — திரு. எஸ். எஸ் மரியதாஸ்
பொருளாளர்— திரு. ஜி. எஸ். வேலாயுதம்

நிர்வாகசபை உறுப்பினர்கள்

செல்வி எஸ். பி. தேவா
திரு எப். ஆர் எப். அருட்சோதி
திரு ஏ. குணரட்ணம்
திரு. எஸ் தவசீலன்
திரு கே. முருகமூர்த்தி

இவர்கள் இடைக்கால நிர்வாக குழு உறுப்பினராகவும் பிரிவு தேர்தல் ஆயத்த குழு உறுப்பினராகவும் செயற்படுவர்

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
22 - 07 - 92

07057

## நீதி நிர்வாக அமைப்புகள் சேவை இடை நிறுத்தம்

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் அனைத்து சேவைகளும், மேன் முறையீட்டு மன்றங்கள், ஆரம்ப நீதிமன்றங்கள், இணக்க மன்றுகள் ஆகியவற்றின் செயற்பாடுகள் இன்று முதல் இடை நிறுத்தப்படுகின்றன

இத்தகவலை புலிகளின் நீதி நிர்வாகப் பிரிவு அறிவித்துள்ளது இணக்கமன்று ஆரம்ப நீதிமன்ற உறுப்பினர்களை தத்தமது பிரிவு நீதி நிர்வாக பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது

## காங்கேசனிலிருந்து மேரினாள் பருத்தித்துறை வருகிறது

காங்கேசன்துறை களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு மெரினால் என்ற சிறிய சரக்கு கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் 2000 மெ. தொன். உணவுப் பொருள்கள் காங்கேசன் துறை களஞ்சியத்திலிருந்து ஏற்றி வரப்படுவதாக அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது.

காங்கேசன்துறை களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருள்களை பருத்தித்துறை முகத்துக்கு இக்கப்பலில் கொண்டு வருவதற்கு செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அவ்வட்டாரம் மேலும் தெரிவிக்கது'

47, 07 06

## ★ கொழும்பில் அரச அதிபர் நடவடிக்கை

## எண்ணெய், சவர்க்காரங்களை தனிக்கப்பலில் எடுத்துவர முயற்சி

கொழும்பில் இருந்து தனியான கப்பல் ஒன்றில் மண்ணெண்ணெய், தேங்காய்எண்ணெய், சவர்க்காரம் போன்றவற்றை யாழ். மாவட்டத்திற்கு ஏற்றி வருவதற்கு யாழ் அரச அதிபர் கா மாணிக்கவாசகர் கொழும்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக யாழ். செயலக வட்டாரம் தெரிவித்தது

இப் பொருள்களை கப்பலில் ஏற்றிவருவதற்கு கூட்டுப்படை தலைமையகத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அனுமதி கிடைத்ததும் இப் பொருள்கள் தனியான கப்பலில் பருத்தித்துறைத்துறைமுகத்திற்கு ஏற்றிவரப்படுமாம்

இது சம்பந்தமான செய்தி ஒன்றினை யாழ் அரச அதிபர் கொழும்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மூலமாக யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

47, 07 06

### தந்திரிமலை...

குண்டு வெடிப்பில் பலியான விமலஞானதேரர் தந்திரிமலையில் சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதில் தீவிரமாக முன்னின்று உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது இவரினால் இப்பகுதியில் பல சிங்கள குடியேற்றங்களும் விஹாரையை சூழவுள்ள பகுதியில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன,

1991 இன் நடுப்பகுதியில் ஸ்ரீலங்கா அரசு உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது இராணுவ அதிகாரிகள் சிலர் தந்திரிமலை ரஜமஹாவிகாரைப் பகுதியிலேயே கூடி இராணுவ நடவடிக்கையை மேலும் 6 மாதகாலத்திற்கு நீடிக்க அரசிடம் அவகாசம் கோருவது என தீர்மானித்திருந்தனர் என்பது நினைவு கூரத்தக்கதாம்

## ● பரீட்சை வினாத்தாள்களுடன்

## இம்மாத இறுதிக்குள் குமண வந்து சேரும்?

கொழும்பில் தரித்து நிற்கும் குமண கப்பலில் தற்போது அரிசி, சீனி, மாவு மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கப்பல் எரி பொருள் மற்றும் மருந்துவகைகளை ஏற்றிக் கொண்டு இம்மாத இறுதிப்பகுதியில் பருத்தித்துறை வந்து சேரவுள்ளது.

இக்கப்பலில் முதலாம் திகதி நடைபெறவுள்ள உயர்தர பரீட்சை வினாத்தாள்களும் எடுத்துவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

07, 47 06

### முஸ்லிம்...

லாக நிறுத்தப்பட்டு ஓடிய இவரின் வாகனம் இராணுவ வாகனம் ஒன்றுடன் மோதியதில் பொலிஸார் ஒருவரும் பலியானார்.

முஸ்லிம்கள் பல இடங்களிலும் தாக்குதல் நடத்திய போதிலும் இது குறித்த விவரங்களை கிடைக்கவில்லை என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன

இதனிடையே நேற்று முன்தினம் ரயிலில் கொல்லப்பட்ட அனைத்து முஸ்லிம்களும் ஏறாவூரைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுகிறது

## வாழைச்சேனையில் இரு சடலங்கள் மீட்பு

வாழைச்சேனையில் மேலும் இரு தமிழர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன ஏற்கனவே இப்பகுதியில் 4 தமிழர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

கடந்த வாரம் பேய்த்தாளை அகதி முகாமிலிருந்து முஸ்லிம் கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்ட 8 தமிழர்களில் இவர்களும் அடங்கியிருந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கொப்பக்...

என்றும் கூறப்படுகிறது.

உத்தேச தாக்குதல்கள் கூடுதலான தமிழீழப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகவே இடம் பெறும் என்றும் கூறப்படுகிறது

1993 ஜனவரி முதலாம் திகதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ சிறிலங்கா ராணுவத்தின் இரண்டாவது நிலைக்கு உயர்த்தப் படுவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கனேடிய சபையில் கியுபெக் விவாதம்

கனடா நாட்டின் பிரேஞ்சு மொழி பேசும் கியுபெக் மாகாணத்தின் அதிகரித்த அரசியல் சுயாட்சிக் கோரிக்கையை விவாதிக்க கனடிய பாராளுமன்றத்தின் அவசர கூட்டம் கடந்த புதன்கிழமை பிரதமர் பிரையன் மல்ரோனியினால் அழைக்கப்பட்டது

கனடா நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக உள்ள இக்கோரிக்கை பற்றியும் அரசியலமைப்பு மாற்றம் பற்றியும் ஏனைய ஒன்பது ஆங்கிலம் பேசும் மாகாணங்களின் முதலமைச்சர்களுடனும் பிரதமர் மல்ரோனி ஆலோசனை நடத்தியுள்ளார்,

இவர்கள் ஒரு இணக்கமான தீர்வுக்கு வராத பட்சத்தில் பிரதமர் மல்ரோனி தாமே தீர்வை முன்வைக்கப்போவதாக அறிவித்துள்ளார்

கனடாவுடனான நூற்றி இருபத்தைந்து வருட கூட்டமைப்பிலிருந்து விலகிவிடப் போவதாக பயமுறுத்தும் கியுபெக் தன்எதிர்காலத்தை நிர்ணயிக்க சர்வஜன வாக்கெடுப்பொன்றை எதிர்வரும் ஒக்டோபர் இருபத்தாறாம் திகதி நடத்த தீர்மானித்துள்ளது

## வெற்றிலை திருட்டு

இணுவில், முள்ளானைப் பகுதிகளில் வெற்றிலைகள் ஆட்கள் இல்லாத நேரத்தில் திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜக்கனி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 23-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது